https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

11th AUGUST 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 92

## வீடுகள் எரிக்கப்பட்ட எம்பிக்களுக்கு ரூ.105 கோடி

கலவரத்தின்போது எரிக்கப்பட்ட 41 எம்பிக்களின் வீடுகள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்காக 105 கோடி ரூபா செலவளிக்கப்பட்டுள்ளது என்று அரச கணக் காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

31.மார்ச். 2022 முதல் 31 ஜுலை 2022 வரையான காலப்பகுதியில் சேதப்படுத்தப்பட்ட அரச எம்பிக்களின் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.



# நாமல் தரப்புக்கு வலை

மொட்டு கட்சி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதில்லை என்று முடிவெடுத்து நாமல் ராஜபக்சவை அதன் வேட்பாளராக நிறுத்தியுள்ளபோதிலும்,நாமல் தரப்பை வளைத்துப்போடும் முயற்சியை ரணில் விக்ரமசிங்க இன்னும் கைவிடவில்லை என்று அறிய முடிகிறது.

02

## றிசாத்–சம்பிக்க மீண்டும் சஜித்துடன்



ஐக்கிய மக்கள் சக்தியுடன் முரண்பட்டுக்கொண்டு சுயாதீனமாக பிரிந்து சென்ற சம்பிக்க ரணவக்க எம்பி மீண்டும் சஜித் அணியில் இணையவுள்ளார் என்று சஜித் தரப்பு வட்டாரம் தெரிவிக்கிறது.

02



## தெற்கில் இருந்து தொடங்கும் அனுர

வேட்பு மனுதாக்கல் இடம்பெற்று முடிந்ததும் தெற்கில் இருந்து பிரசார பணியை தொடங்கவுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமாகிய அனுரகுமார திஸாநாயக்க.

02



புதுசுடர்
www.puthusudar.lk
2024 AUGUST 11 - SUNDAY

# சிதையப் போகும் ஜனாதிபதி கனவு

ஜனாதிபதி தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து இப்போதுவரை பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

சஜித் அணியின் கூட்டமைப்பு உருவாக்கம்,தயாசிறி தலைமையிலான சுதந்திர கட்சி சஜித்துக்கு ஆதரவு,90இற்கு மேற்பட்ட மொட்டு எம்பிக்கள் ரணிலுக்கு ஆதரவு,மொட்டின் வேட்பாளராக நாமல் ராஜபக்ச போட்டி உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.இன்னும் அதிகமான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இடம்பெற்றுள்ள அந்த அரசியல் நிகழ்வுகளில் நாமல் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளமை முக்கியமான விடயமாகும்.

ஏனென்றால் ரணிலின் வெற்றிக்கு மொட்டின் ஆதரவு நிச்சயம் தேவை. அப்படியென்றால்தான் ரணிலால் இறுக்கமான போட்டி ஒன்றை சஜித்,அனுர ஆகிய வேட்பாளர்களுக்கு எதிராகக் கொடுக்க முடியும்.

எப்படியாவது இழுத்தடித்து மொட்டு கட்சி இறுதியில் ரணிலுக்கே ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதுமட்டுமல்ல,அவர்கள் ரணிலுக்கு ஆதரவு வழங்காவிட்டால் தம்மிக்க பெரேராவையே வேட்பாளராக நிறுத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த இரண்டு எதிர்பார்ப்புகளையும் பொய்யாக்கிவிட்டு இப்போது நாமல் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

நாமலை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கோசம் நீண்ட நாட்களாக கட்சிக்குள் முன்வைக்கப்பட்டு வந்தது.மொட்டு கட்சியின் இளம் எம்பிக்களே இந்தக் கோசத்தை முன்வைத்து வந்தனர்.

ஏன் நாமல் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்? அவரால் இன்றைய சூழலில் வெல்ல முடியுமா? ரணிலுக்கு ஆதரவு வழங்கி இருந்தால் முழு மூச்சாக நின்று போராடி வென்றிருக்கலாமே என்றெல்லாம் அரசியல் அரங்கில் பேசப்படுகிறது.

மொட்டு ரணிலுக்கு ஆதரவு வழங்கியும்கூட ரணிலால் வெல்ல முடியாத சூழ்நிலை இருப்பதாலேயே நாமலை கட்சியின் வேட்பாளராக நிறுத்துவதற்கு மஹிந்த ராஜபக்ச முடிவெடுத்தார் என்று சொல்லப்படுகிறது.

எப்படியோ தோல்வியடையத்தான் போகிறோம்.அதைவிட நாமலை இறக்கினால் அவரை அரசியலில் கொஞ்சம் பதப்படுத்தி எடுக்கலாம் என்ற நோக்கிலேயே மஹிந்த இந்த முடிவை எடுத்திருக்கிறார்.

ஆனால், நாமல் எதிர்கொள்ளும் முதலாவது தேர்தலே தோல்வி காணப்போகும் தேர்தல் என்பதுதான் உண்மை.அவரை எடுத்த எடுப்பில் வெல்ல வைப்பதற்கான வாய்ப்பை முதலாவதாகத் தவறவிட்டவர் மஹிந்ததான்.

இரண்டாவது தடவை கோத்தாவால்.இல்லாமல் போனது.

மஹிந்த 2005இல் முதல் தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவாகிறார்.2010இல் அவர் இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகிறார்.

அப்போதே அவர் தீர்மானித்துவிட்டார் இந்த அரசியல் அதிகமானது குடும்ப சொத்தாக மாற வேண்டும் என்று.

அதற்கு ஏற்ப,தனக்குப் பின் இந்த அதிகாரத்தை தனது வாரிசு கையில் வைத்திருக்க வேண்டும் என்று மஹிந்த முடிவெடுக்கிறார்.

அதற்கு அவர் தெரிவு செய்தது தனது மூத்த மகன் நாமல் ராஜபக்சவை.2010 நாடாளுமன்றத் தேர்தலில் ஹம்பாந்தோட்டையில் நாமலை களமிறக்குகிறார் மஹிந்த.வெற்றியும் பெறுகிறார் நாமல்.

நாமல் இப்போதுதான் நாடாளுமன்றத்துக்கு நுழைந்துள்ளார். அரசியல் அனுபவமில்லை.அந்த அனுபவமும் ஜனாதிபதியாவதற்கு பொருத்தமான பக்குவமான வயதும் வரும்வரைக்கும் ஆட்சி அதிகாரத்தை தொடர்ச்சியாக தன் கையில் வைத்திருக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார் மஹிந்த.

அதற்காகவே அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஒருவர் இரண்டு தடவைக்குமேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்ற வாக்கியத்தை அரசமைப்பில் இருந்து தூக்குகிறார்.

இப்போது ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக இருக்க முடியும் என்று அரசமைப்பு அனுமதிக்கிறது.

இந்த அனுமதியுடன் மூன்றாவது தடவையும் 2015 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார் மஹிந்த.

மஹிந்த அரசின் ஊழல்,குடும்ப ஆட்சி மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான இனவாதம் எல்லாம் சேர்ந்து மஹிந்தவைத் தோற்கடிக்கிறது.

2015இல் ஆட்சிக்கு வந்த அரசு அரசமைப்பில் ஏற்கனவே இருந்த ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்ற வாக்கியத்தை மீண்டும் அரசமைப்பில் சேர்த்து சட்டமாக்குகிறது.

இதனால் மஹிந்த இனி போட்டியிடவே முடியாத நிலை ஏற்படுகிறது.

இருந்தாலும் பரவாயில்லை.2019 ஜனாதிபதி தேர்தலில் தனது குடும்பத்தில் வேறு ஒருவரை நிறுத்தி மீண்டும் ஆட்சியைப் பிடித்து தக்கவைத்தல். அப்படியே 2024 இல் நாமலை களமிறக்குதல் என்று முடிவெடுத்தார் மஹிந்த.

மஹிந்தவின் திட்டப்படி,2019 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த தரப்பு ஆட்சியைப் பிடிக்கிறது. ஆனால்,கோத்தாவின் மோசமான ஆட்சியால் நாட்டின் பொருளாதாரம் சரிந்து இறுதியில் மக்கள் வீதிக்கு இறங்கி அவரை பதவியில் இருந்து விரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் உண்மையில் பாதிக்கப்பட்டது நாமலின் ஜனாதிபதி கனவுதான்.சரியான முறையில் கோத்தா ஆட்சியை நடத்தி இருந்தால் இந்தத் தேர்தலில் நாமல் வெற்றிபெறுவது பெரிய காரியமல்ல.

இப்போது தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் நான்காம் இடத்துக்குத் தள்ளப்படக்கூடிய நிலையில்தான் நாமல் போட்டியிடுகிறார்.

தோல்வி நிச்சயம் என்பதைப் புரிந்து ஓர் அனுபவம்-அரசியல் பக்குவம் வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகத்தான் நாமல் போட்டியிடுகிறாரே தவிர வெற்றியைப் பெறுவதற்காக அல்ல.

மஹிந்தவின் ஆட்சியில் குடும்ப வாதம்,ஊழல், மோசடி தலை தூக்கி இருக்காவிட்டால் மஹிந்தவின் கைகளில் தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரம் இருந்திருக்கும்.அதை வைத்து இந்த முறை தேர்தலில் நாமல் இலகுவாக வெல்வது உறுதி.

அப்படி இல்லாவிட்டால் கோத்தா சரி நல்லாட்சி புரிந்திருந்தால் அதுகூட நாமலின் வெற்றிக்கு வழிவகுத்திருக்கும்.

ஆனால், இரண்டு வாய்ப்புகள் தவறவிடப்பட்ட நிலையில் களமிறங்கி இருக்கிறார் நாமல்.இதுதான் அரசியல்.

## நாமல் - சுமந்திரன் சந்திப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கலந்துரையாடல் சுமந்திரன் வீட்டில் இடம்பெற்றது. நேற்று (10) நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசமும் கலந்துகொண்டார்.

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியுடன் கலந்துரையாட எதிர்ப்பார்ப்பதாக நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

### றிசாத்..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அதேபோல், றிசாத் பதியுதீனின் கட்சியும் சஜித்துக்கே ஆதரவு வழங்குவதற்கு முன்வந்துள்ளது என்று அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

அடுத்த வாரம் இவர்கள் இருவரும் உத்தியோகபூர்வனாக சஜித் அணியுடன் இணைந்துகொள்வர் என்று அறிய முடிகிறது.

### தெற்கில்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

காலிஇமாத்தறை மற்றும் தங்காலை ஆகிய இடங்களில் 17ஆம் திகதி தேர்தல் பிரசாரத்தைத் தொடக்கி வைக்கிறார் அனுர.

அனுரவின் வெற்றிக்காக அக்கட்சி கிராம மட்டங்களில் இறங்கி வேலை செய்வதாகவும் அனுரவின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் நலின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

### நாமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

**வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு முன் எப்படியாவது மொட்டு கட்சியின் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தி அக்கட்சியின் ஆதரவை ரணிலுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையில் ரணிலுடன் இணைந்துள்ள மொட்டு எம்பிக்கள் பலர் ஈடுபட்டுள்ளனர் என்று ரணில் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**மேலும்,அதேபோல்,ஏனைய கட்சிகளையும் வளைத்துப்போடும் செயற்பாடும் தொடர்கிறது எனவும் அவர்களுடன் தொடர்ச்சியாக பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.**





# இஸ்ரேலைத் தாக்குவதற்கு நாள் குறித்த ஈரான்

ஹமாஸின் தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் மரணத்துக்கு பின் அந்த இடத்துக்கு எஹியா சின்வார் நியமிக்கப்பட்டுள்ளார். சின்வார் சிறந்த நிர்வாகி-இராணுவ தளபதி-எழுத்தாளர்-யூத வரலாற்றை நன்கு அறிந்தவர்.

இஸ்ரேலுக்குள் ஹமாஸ் நுழைந்து நடத்திய அந்த ஒக்டோபர் தாக்குதலைத் திட்டமிட்டவர் இவர்தான்.

முழுவதுமாக இஸ்ரேலின் முற்றுகைக்குள் இருக்கும் காஸாவை 6 வருடங்களாக மிகவும் திறமையாக நிர்வகித்தவர்.

இஸ்ரேலிய சிறையில் 23 வருடங்கள் இருந்தவர்.அந்த 23 வருடங்களும் குர்ஆனை முழுமையாக மனனமிட்டு-யூதர்களின் ஹீப்ரூ மொழியை எழுத-வாசிக்க கற்றுக்கொண்டு-யூத வரலாற்றை முழுமையாகப் படித்தவர்.

அரசியலிலும் போரிலும் சிறந்த அனுபவமும் திறமையும் உள்ளவர் என்பதால் இவரின் நியமனமானது இஸ்ரேலுக்கு பெரும் சவால் என்பதில் சந்தேகமில்லை.

இஸ்ரேலுடன் இனி இடம்பெறப்போகும் பேச்சுக்கள் அனைத்திலும் இவர் நேரடியாகக் கலந்துகொள்வார் என்கிறது ஹமாஸ்.

இவர் எங்கே இருக்கிறார் என்ற விபரம் தெரியவில்லை.இவர் இஸ்ரேலால் தேடப்படும் ஒருவர்.இவரின் நியமனத்தால் ஹமாஸ் மேலும் உத்வேகம் அடைந்துள்ளது.இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படையினர்மீதான தாக்குதல் உக்கிரமடைந்துள்ளது.

மறுபுறம், இஸ்மாயில் ஹனியா ஈரானில் வைத்து கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது கடும் கோபத்தில் உள்ளது ஈரான் .தமது நாட்டுக்குள்ளேயே வைத்து தாக்குதல் நடத்தியமையானது ஈரானுக்கு பெருத்த அவமானமாகப் போய்விட்டது.

தனது விருந்தாளியைக்கூட பாதுகாக்க முடியவில்லை.ஈரானுக்கு உள்ளேயே பாதுகாப்பில்லை.என்றெல்லாம் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் சேர்த்து இஸ்ரேலை பழிவாங்கப் போவதாகவும் இஸ்ரேலை அழிக்கப்போவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

இதேவேளை,40 போர் கப்பல்களை தாங்கிய கப்பல் ஒன்றை அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.அந்தக் கப்பல் இப்போது ஈரானுக்கு அருகில் ஹொர்முஸ் பகுதியில் தரித்து நிற்கிறது.

ஈரான் இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தினால் ஈரானைத் தாக்குவதற்காகவே அந்தக் கப்பல் வந்துள்ளது என்று சொல்லப்படுகிறது.இல்லை ஈரானை எச்சரிப்பதற்காகவே வந்துள்ளது என்று சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால்,உண்மையில் அந்தப் போர் கப்பல் ஈரானுக்கு அச்சுறுத்தல் கிடையாது.அந்தக் கப்பலைத் தாக்குவது ஈரானுக்கு கஷ்டமான காரியமல்ல. கப்பலை தாக்கி அழித்துவிட்டால் அந்தக் கப்பலில் உள்ள போர் விமானங்களால் எதுவும் செய்ய முடியாது.கப்பலுடன் சேர்ந்து விமானங்களும் மூழ்க வேண்டியதுதான்.

அப்படி இல்லாவிட்டால் அந்த விமானங்களுக்கு அருகில் உள்ள முஸ்லிம் நாடுகள் இடம் கொடுக்க வேண்டும்.அப்படிக் கொடுத்தால் அந்த நாடுகள்மீது ஈரான் தாக்குதல் நடத்தும். அதனால் அதுவும் சாத்தியமில்லை என்கிறார்கள் நிபுணர்கள்.

ஆகவே,அந்தக் கப்பல் வந்து எந்தப் பயனுமில்லை.அதுபோக,இவ்வாறு வந்த பல கப்பல்களை ஹூதிகள் அண்மைக்காலமாக அழித்திருப்பதை நாம் அறிவோம்.

இப்படியானதொரு நிலையில்,இஸ்ரேல் மீது ஈரான் போர் தொடுத்தால் எப்படி இஸ்ரேலை காப்பாற்றுவது என்று யோசித்துக்கொண்டிருக்கிறது அமேரிக்கா.

இஸ்ரேலைத் தாக்குவதற்காக ரஷ்யாவும் ஈரானுக்கு உதவிகளை செய்து வருகிறது.யெமனின் ஹூதிகளுக்கு பயிற்சியும் வழங்கி வருகிறது.

அதேவேளை,இஸ்ரேலை காப்பாற்றுவதற்கு சவூதி,ஜோர்தான் போன்ற நாடுகளும் நடவடிக்கை எடுத்துள்ளது.இஸ்ரேலைத் தாக்குவதற்காக தங்களின் வான் பரப்பை ஈரான் பாவிக்கக்கூடாது என்று அந்த நாடுகள் கூறியுள்ளன.

இது இவ்வாறிருக்க ஹமாஸ் படையினரும் ஹிஸ்புல்லா போராளிகளும் தொடர்ச்சியாக இஸ்ரேலைத் தாக்கி வருகின்றனர்.இஸ்ரேலின் முக்கிய தளங்கள்.இராணுவத் தளங்கள்மீது கடும் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இந்தப் போர் இப்போது முடிவதற்கான சாத்தியமே இல்லை.தமது தலைவர் கொல்லப்பட்டதால் ஆத்திரமடைந்துள்ள ஹமாஸ் இஸ்ரேலை ஒரு கை பார்க்காமல் விடாது என்றே நம்பப்படுகிறது.

ஏற்கனவே இஸ்ரேலிய இராணுவம் விருப்பமே இல்லாமல் ஹமாஸ/க்கு எதிராக போர் செய்து வருகின்றனர். காஸாவுக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவம் மீது ஹமாஸ் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.இஸ்ரேலிய படை கடும் சேதங்களை எதிர்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் ஹமாஸ் தமது தலைவரின் கொலைக்காக பழிவாங்கலை மேலும் தீவிரப்படுத்தினால் அதை இஸ்ரேலிய படையால் தாங்கிக்கொள்ள முடியாது.

ஈரானும் நேரடித் தாக்குதலைத் தொடுத்தால் இஸ்ரேல் கடும் நெருக்கடிக்குள் சிக்கும்.இந்த போரை நிறுத்துமாறு ஏற்கனவே இஸ்ரேலிய மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

நெதன்யாஹூவின் அரசு எல்லா பக்கத்திலும் நெருக்கடியைச் சந்தித்தும் கூட,போரை நிறுத்துவதாக இல்லை.இதனால் இஸ்ரேலிய மக்கள் அழிவைச் சந்தித்து வருகிறார்கள்.

இஸ்ரேல் மீது 15ஆம் திகதி தாக்குதல் நடத்தப்போவதாக ஈரான் அறிவித்துள்ளது.ஈரான் தாக்குதலைத் தொடுத்தால் இஸ்ரேலின் தற்போதைய நிலைமை மேலும் சிக்கலை எதிர்கொள்வது நிச்சயம்.

தாக்குதலை நடத்துமா இல்லையா,.. பொறுத்திருந்து பார்ப்போம்.






# வெளியே சிதறிய குடல்கள்: தண்ணீர் கேட்டவரின் நாக்கை வெட்டிய புலிகள்: சிதறி ஓடிய மக்கள்: விரட்டி விரட்டி சுட்ட கொடூரம்:

## -ஏறாவூர் படுகொலையின் ஒரு துளி...!!!

34 வருடங்களை அடைந்துவிட்டோம்.12.08-1990. புலிகளின் அந்தப் படுகொலை இடம்பெற்று...121 அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டு... நினைத்துப் பார்க்க முடியா கொடூரம் அது. பயங்கரமான இரவு...!!!

கும்மிருட்டு.எங்கும் இருட்டு.கரண்ட் இல்லை சில மாதங்களாக..

ஒவ்வோர் இரவும் இப்படியே...!!! பயங்கரம்-அச்சம்.

இரண்டாம் கட்ட ஈழப் போர் தொடங்கியதில் இருந்து... காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை இடம்பெற்றதில் இருந்து...

நீண்ட சம்பவங்கள்.நிறைய சம்பவங்கள். எல்லாவற்றையும் எழுத முடியாது.ஒரு தொடர் போதாது. அதனால்.... நேரே செல்வோம் அந்த இருளுக்குள்.படுகொலை இரவுக்குள். பிரதானமாக ஐந்து இடங்களில் சம்பவம். புலிகளின் கொலை வெறியாட்டம்.

01-ஏறாவூரின் மேற்குப் பகுதியான சுரட்டையன்குடா.

02-வைத்தியாசாலை முதல் அலிகார் பாடசாலை வரையான புன்னைக்குடா வீதி.

03-அதே வைத்தியசாலை முதல் அலிகார் விளையாட்டு மைதானம் வரையான பகுதி.கிழக்கை நோக்கிய பகுதி.

04-அக்பர் பள்ளிவாசல் பகுதி.

05-சதாம் ஹுஸைன் பகுதி.

இரவு 11 மணி இருக்கும். ஒரு வெடில். ஒரேயொரு வெடில். தமிழர் பகுதிக்குள். ஏறாவூர் நீதிமன்றம் அமைந்துள்ள பகுதிக்குள்... அவ்வளவுதான்... கொதிகொள்கிறது ஊர்.அச்சத்தால்... எதிர்பார்த்திருந்தது அல்லவா. சரி.. அது புலிகள்தான்.

உடனே வெளியேறுகிறார்கள் மக்கள். சுரட்டையன்குடா பகுதி மக்கள்.ஊரின் நடுப்பகுதியை நோக்கி... காரணம்... அந்தப் பகுதியில்தான் அந்த வெடில்... சுரட்டையன்குடா எல்லையில் இருந்து இருநூறு,முன்னூறு மீற்றர் தூ ரத்தில்தான் அந்த வெடில். வெடில் கேட்டு ஓரிரு நிமிடங்கள்தான்...

புலிகள் இப்போது உள்ளே.. சுரட்டையன்குடா பாலத்தில். பிரிகிறார்கள் இரண்டாக...!!! ஒரு குழு பாலத்தின் பின்புறமாக...ஆற்றங்கரை பக்கமாக... அடுத்த குழு அதற்கு எதிரே... இந்தக் குழுவிடம் சிக்குகிறார் உசனார் எனப்படும் வெள்ளைத்தம்பி.கூடவே அவரது மகனும்.4 வயது மகன். இவர்கள் இருவரும்தான் முதல் பலி. புலிகளின் மாமிச வேட்டையின் முதல் இரை. அதேநேரம்... அடுத்த குழுவிடம் சிக்குகிறது மஹ்மூத் லெப்பை வட்ட விதானையின் குடும்பம்.

மஹ்மூத் லெப்பை அந்த இடத்திலேயே சரி. அவரது மனைவி-பேத்தி ஜாஹிரா அமீன் காயம். ஜாஹிரா படுகாயம். இரண்டு சம்பவங்களும் ஒரே நேரத்தில்... அடுத்து...? நடக்கிறது வேட்டை. சிதறி ஓடுகிறார்கள் மக்கள் நாலா பக்கமும்.விரட்டிச் செல்கிறார்கள் புலிகள். சுடுகிறார்கள் விரட்டி..விரட்டி... ஒருவர் கழிவறைக்குள். மறைக்கிறார் வாளியால்... பதம் பார்க்கின்றன புல்லட்கள் தலையை.அந்த வாளியை உடைத்துக்கொண்டு... வாசலில் இன்னொருவர்.வீழ்ந்து கிடக்கிறார் மல்லாக்க.குடல் வெளியே..

""குடல அள்ளிவச்சு கட்டுங்க...""" சத்தம் வைக்கிறார் வேதனையில்... யாரால் நெருங்க முடியும்...!!!! அவரது தலைமாட்டில் ஜாஹிரா. இவரும் வேதனையில்...அவரும் வேதனையில்... யாருக்கும் யாரும் உதவ முடியா நிலை தண்ணீர் கேட்டு கத்துகிறார் இன்னொரு சகோதரர்.நாசர். தண்ணீரோடு செல்கிறார் ஒரு தாய். தண்ணீர் கேட்ட நாக்கை வெட்டுகிறார்கள் புலிகள். அந்தத் தாயும் சரி. புலிகளுக்கு ஏசுகிறார் அந்தத் தாய்.ஏசிய நிலையிலேயே பிரிகிறது அவரின் உயிர்.

அதேநேரம்,நாசரின் உயிரும்... அடுத்து ...???

நுழைகிறார்கள் இன்னொரு வீட்டுக்குள்.ஜலால்தீன் அதிபரின் வீடு. ஆண்கள் யாரும் இல்லை.எல்லோரும் வெளி ஊர்களில்... பெண்கள் மாத்திரமே அங்கு.கூடவே ஆண் என்று கடைசி மகன் அக்பர் மாத்திரமே.3 வயது அத்தனை பெண்களும் சரி. தப்புகிறான் அந்த சிறுவன் மாத்திரம்.

இப்படித் தொடர்கிறது கொலை வெறியாட்டம்.அப்பகுதியில்... 20இற்கு மேற்பட்டோர் பலி. அடுத்த வெறியாட்டம்...? ஏறாவூர் வைத்தியசாலை பகுதி முதல் அபுசாலி தைக்கா பள்ளிவாசல் வரையான பகுதிக்குள் ஆரம்பமாகிறது முத்துவாப்பா ஆசிரியரின் குடும்பம்,நாவையடி கடை மில் காவலாளி ஆகியோரில் இருந்து...

அதே தொடரில் டாக்டர் அஹமட் பரீத் வித்தியாலய அதிபர் சக்கூர் சேரின் வாப்பா,மூத்த வாப்பா,மூத்த உம்மா. சுட்டுப் போடுகிறார்கள் வீதியிலேயே... புன்னக்குடா வீதியில்...

அப்படியே நகர்ந்து... ஜிப்ரி தைக்கா பள்ளிவாசலுக்கு அருகில். அங்கு சில இளைஞர்கள்.அவர்களும் சரி.

இறுதியாக கலாநிதி அமீர்தீன் சேரின் குடும்பம்.அதில் 18 பேர். தனி மரமாகிறான் அந்தச் சிறுவன். தாய்,தந்தை,சகோதரிகள் என எல்லோரையும் இழந்து...

அமீர்தீனின் மருமகன் நியாஸ்.. ஜஊழனெரஉவழச -நுசயளரச ஊவுடீ ஸஅடுத்து...??? வைத்தியசாலை முதல் அலிகார் மைதானம் வரையான பகுதி. அங்கும் வெறியாட்டம். நகருகிறார்கள் அங்கிருந்து அக்பர் பள்ளிவாசலை நோக்கி... 9 பேர் பலி அப்பகுதியில். பள்ளிவாசல் தலைவர் அலி முஹம்மட்டின் வீட்டில் நால்வர். பள்ளிவாசலுக்கு முன்பாக மூவர். பள்ளிவாசல் கிணற்றடியில் இருவர். அடுத்த கொலை வெறியாட்டம்...???

சதாம் ஹுஸைனில்...இறுதி வேட்டை... அத்தோடு முடிகிறது புலிகளின் வேட்டை.அன்றைய இரவு வேட்டை. மொத்தம் 121 உயிர்கள்.

நான் இங்கு எழுதி இருப்பது ஒரு துளியையும் விடக் குறைவான அளவுதான். கடல்போல் குவிந்து கிடக்கின்றன சம்பவங்கள்.

அவை அனைத்தும் விரைவில்....

**(ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்)**



# பாடசாலை ரக்பி தொடருக்கு அனுசரணை



இலங்கையில் அனைவராலும் விரும்பப்படும் உடனடி நூடுல்ஸ் வர்த்தகநாமமும், நாட்டிலுள்ள இளைஞர்களின் துடிப்பான ஆற்றலைப் பிரதிபலிக்கும் வகையிலான **Hot N' Spicy** சுவைக்காக பிரபலமான **Prima KottuMee**, நாட்டின் பிரபலம் மிக்க பாடசாலை ரக்பி அணிகளுடன் உத்தியோக பூர்வமாக இணைவதை அறிவிப் பதில் பெருமிதம் கொள்கிறது.

கொழும்பு றோயல் கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி, புனித பீட்டர் கல்லூரி, திரித்துவ கல்லூரி, புனித ஜோசப் கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி, இசிபதான கல்லூரி, புனித அந்தோனியார் கல்லூரி ஆகியவற்றின் ரக்பி இரசிகர் களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், மிகவும் எதிர்பார்ப்பு க்குரிய 2024 பாடசாலை ரக்பி தொடர் முழுவதும், விளையாட்டின் மீது தாம் கொண்டுள்ள ஆதரவை **Prima KottuMee** வெளிப்படு த்தவுள்ளது.

இந்த அணிகளுக்கு ஆதரவ ளிப்பதன் மூலம், இலங்கை இளைஞர்கள் கொண்டுள்ள ஆர்வத்துடனும் ஆற்றலு டனும் தன்னை இணைத்துக் கொண்டு, உணர்ச்சிபூர்வமான பாடசாலை ரக்பி கலாசாரத்தின் ஒரு அங்கமாக விளங்குவதில் **Prima KottMee** பெருமை கொள்கிறது.

# HNB Self-onboarding அறிமுகம்





நாட்டில் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய நடவடிக்கையாக, இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான **HNB PLC**, வாடிக்கையாளர்கள் முழுமையாக **Online,ý** ஒரு **HNB** கணக்கைத் ஆரம்பிக்க வசதியளிக்கும் ஒரு மாற்றத்தக்க டிஜிட்டல் வங்கி தீர்வான **HNB Self-Onboard-ing** ஐ அறிமுகப்படுத்தியது.

**"HNB,ன் Self-Onboarding** வசதி என்பது ஒரு புரட்சிகரமான தீர்வாகும், இது எந்தவொரு வாடிக்கையாளரும் முக்கிய தயாரிப்புகளின் முழு வரம்பையும் முழுமையாக தொலைதூரத்தி லிருந்தே அணுக அனுமதிக்கிறது. இது வங்கியின் டிஜிட்டல் பயண த்தில் மட்டுமல்ல, நாட்டின் டிஜிட்டல் பயணத்திலும் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது, இது எதிர்பார்ப்புள்ள வாடிக் கையாளர்களுக்கு இலங்கையில் எங்கிருந்தும், உலகெங்கிலும் கூட தங்கள் சொந்த விதிமுறைகளின் அடிப்படையில் வங்கி சேவையைப் பெற வசதியளிக்கிறது.

# SVAT ஒழிப்பை அவசரமாக மறுபரிசீலனை செய்க

எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி (**SVAT**) முறை ஒழி க்க ப்படுவதற்கான காலக்கெடு 1 ஏப்ரல் 2025 அன்று முடிவடையும் நிலையில், இலங்கை ஆடைத் தொழிலின் உச்ச அமைப்பான ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (**JAAF**), தொழில்துறையில் அதிகரித்து வரும் அழுத் தங்களைக் கருத்தில் கொண்டு, இந்த முடிவை அரசு அவசரமாக மறுபரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது.

"உலகளாவிய சந்தையில் ஆடைத் துறை தற்போது கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதன் தாக்கம் ஏற்று மதி அளவு குறைந்து வருவதில் தெளிவாக தெரிகிறது. இத்தகைய சூழலில், சாத்தியமான மற்றும் திறமையான பணத்தைத் திரும்பப் பெறும் வழிமுறையை முதலில் உருவாக்காமல், **SVATI** நீக்குவது, நாட்டின் மொத்த ஏற்றுமதிப் பட்டியலில் சுமார் பாதி பங்களிப்பைக் கொண்டிருக்கும். ஆடைத் தொழில் உட்பட அனைத்து ஏற்றுமதியாளர்களின் பணப்புழக்கத்தையும் பெரிதும் பாதிக்கும். இந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தவறி னால், இந்தத் துறையில் நிதி நெருக்கடியை நிச்சயம் அதிக ரிக்கும்.

மேலும், மிகவும் திறமையான அமைப்புகளிலும், பணம் திரும்பப் பெறும்செயல்முறைகளில் தவிர்க்க முடியாமல் சிக்கிக் கொள்ளும் என்பதால், இலங்கையின் ஏற்றுமதிப் போட்டித்தன்மையை மேலும் பாதிக்கும்." என **JAAF**இன் **SME** துறையை பிரதிநிதித் துவப்படு த்தும் இலங்கை ஆடை ஏற்றும தியா ளர்கள் சங்கத்தின் தலைவர் பந்துல பெர்னாண்டோ தெரிவித்தார்.

# Capital Market Clubக்கு அமானா அனுசரணை



பாடசாலை மாணவர்கள் மத்தியில் நிதிசார் அறிவை வழங்கி, தகவ லார்ந்த முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவர்களாக கட்டியெழுப்பும் வகையில் றோயல் கல்லூரியின் **Capital Market Club** உடன் அமானா வங்கி அண்மையில் கைகோர்த்திரு ந்தது.

அதன் பிரகாரம், கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாவது '**Market Mastery**' பயிற்சிப்பட்டறைக்கு அனுசரணை வழங்கியிருந்தது.

ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றின் இணைந்த முயற்சியாக **Capital Market Club** அமைந்திருப்ப துடன், மாணவர்களுக்கு அத்தியாவசியமான நிதிசார் அறிவைப் பெற்றுக் கொடுக்க இவை கைகோர்த்துள்ளன. வினைத்திறனான நிதி முகாமை த்துவம் மற்றும் குறைந்த இடர் கொண்ட நிதிசார் செயன் முறைகள் பற்றிய பரிபூரண புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

**Capital Market Club** இன் அறிமுக நிகழ்வான **Market Mastery** அண்மை யில் றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடை பெற்றது. இதில் மேல் மாகாணத்தின் 18 பாடசாலை களைச் சேர்ந்த 200 மாண வர்கள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சிப் பட்டறையின் போது முன்னணி மூலதன சந்தையின் நிபுணர்கள் பெறுமதி வாய்ந்த அறிவையும், முக்கியமான தகவல்களையும் பகிர்ந்து கொண்டதுடன், மாணவர்களுக்கு பங்குப் பரிவர்த்தனை, முதலீட்டு மூலோபாயங்கள், நிதிப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வு செயன்முறைகள் போன்றன தொடர்பான அறிமு கங்களையும் வழங்கியிருந்தனர்.

# IndiGoவின் ஆகாய வழித்துடமாக யாழ்ப்பாணம்

இந்தியாவின் தெரிவுக்குரிய விமான சேவையான **IndiGo**, இலங்கையின் யாழ்ப்பாணத்தை தனது புதிய சர்வதேச ஆகாய வழித்தடமாக சேர்த்துள்ளதாக அறிவித்துள்ளது.

2024 செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே தினசரி இடைவிடாத விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது. கொழும்பை தொடர்ந்து, யாழ்ப்பாணம் இலங்கையில் ஐனெபைழ பறப்பில் ஈடுபடவுள்ள இரண்டாவது பறப்பிடமாக அமைந்திருக்கும். அதன் பரந்த 6நு வலையமைப்பில் ஒட்டுமொத் தமான 122 ஆவது பகுதியாகவும், 34ஆவது சர்வதேச விமான நிலையமாகவும் அமைந்திரு க்கும்.

இந்த மூலோபாய அறிவிப்பி னூடாக, இலங்கைக்கும் இந்தியாவு க்குமிடையே காணப்படும உறு தியான கலாசார மற்றும் வர்த்தக உறவுகள் மேலும் மேம்படும் என எதிர்-பார்க்கப்படுவதுடன், வணிகம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஆகாய இணைப்பு போன்றவற்றில் இணைந்த செயற்பாடுகளினூடாக அவை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளன. விமான சேவைகளுக்கான முற்ப-திவுகள் 2024 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# பெண் தொழில் முயற்சியாண்மை கௌரவிப்பு



பெண்களை மையமாகக் கொண்ட மொத்த வங்கிச் சேவை முன்மொழிவான DFCC ஆலோக, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண் தொழில்முயற்சியாண்மையைக் கௌரவித்து, ஆதரிக்கும் பிரத்தியேக நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளது. “DFCC ஆலோகவின் பெண் தொழில்முயற்சியாண்மையின் மகத்துவத்தின் கொண்டாட்டம்” (DFCC Aloka Celebrates Women Entrepreneurial Excellence) என்ற தொனிப்பொருளில், இந்நிகழ்வானது DFCC வங்கியின் தலைமை அலுவலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. பல முன்னணி பெண் தொழில்முயற்சியாளர்கள், DFCC பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள், DFCC வங்கியின் பணியாளர்கள், மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் (Women’s Chamber of Industry and Commerce -WCIC) தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்களாகவுள்ள DFCC வாடிக்கையாளர்கள் என மதிப்பிற்குரிய விருந்தினர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யூனியன் அஷ்யூரன்ஸ் யூனியன் கெமிஸ்ட்ஸ் உடன் கைகோர்ப்பு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், வாடிக்கையாளர்களின் நலமான வாழ்க்கையை தொடர்ந்தும் மேம்படுத்தும் தனது செயற்பாடுகளில் மற்றுமொரு அங்கமாக, 60 வருடங்களுக்கு மேலாக உயர் தரம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பு தயாரிப்புகளை வழங்குவதில் சிறப்பைக் கொண்டுள்ள, நாட்டின் முன்னணி மருந்துப் பொருட்கள் சேவை வழங்குநரான யூனியன் கெமிஸ்ட்ஸ் உடன் கைகோர்த்துள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக, மருத்துவத்துடன் தொடர்புடைய செலவுகள் அதிகரித்துக் காணப்படும் காலகட்டத்தில், மருந்துப் பொருட்களை மிகவும் சிக்கனமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் எதிர்பார்க்கின்றது. யூனியன் அஷ்யூரன்ஸ் தனது காப்புறுதிதாரர்களுக்கு, எந்தவொரு யூனியன் கெமிஸ்ட்ஸ் மருந்தகங்களிலும், மருந்துச் சிட்டைகளுக்கான மருந்துகளை கொள்வனவு செய்யும் போது விலைக்கழிவுகளை பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது. ஆயுள் காப்புறுதித் துறையின் பரிபூரணமான மொபைல் app ஆக கருதப்படும் நிறுவனத்தின் மொபைல் app Md Click-life ஊடாகவும் இந்த விலைக்–கழிவு களை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும். சௌகரியத்தை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு யூனியன் கெமிஸ்ட்ஸ் நிலைத்துக்கும் பிரத்தியேகமான WhatsApp இலக்கம் காணப்படுகின்றது. அதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு மருந்து சிட்டையை பதிவேற்றி தமது ஓடர்களை மேற்கொள்ளலாம்.

# நீரிழிவுக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய மைல்கல்




இலங்கையில் நீரிழிவு நிர்வகிப்பு மற்றும் விழிப்புணர்வூட்டல் தொடர்பான முன்னணி அமைப்பாக திகழும் இலங்கை நாளமில்லாச்சுரப்பு மருத்துவ நிறுவகத்துடன் (SLCE), முன்னணி மருந்தாக்கல் நிறுவனமான Morison லிமிடெட் இணைந்து, “நீரிழிவு பராமரிப்பு சான்றிதழ் பயிற்சி கற்கைநெறி” ஐ தொடர்ந்த முதல் தொகுதியின் 65க்கு மேற்பட்ட ஆரம்ப நிலை சுகா–தார பராமரிப்பு வைத்தியர்கள் அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றளிப்பு நிகழ்வு அண்மையில், இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில், சுகாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி. பி.ஜி.மஹிபால ஹேரத் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சுகாதார அமைச்சின், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அசேல குணவர்தன சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். இலங்கையில் ஐந்தில் ஒருவருக்கு நீரிழிவு காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ள, நீரிழிவு நோயாளர்கள் அதிகளவு பதிவாகும் காலப்பகுதியில் முதல் தொகுதியைச் சேர்ந்தவர்கள் நெறியை பூர்த்தி செய்துள்ளமை மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது.

நீரிழிவு நோயாளர்கள் முதலில் சந்திக்கும் நபர்களாக அடிப்படை சுகாதார பராமரிப்பு நிபுணர்கள் அமைந்துள்ளனர். பராமரிப்பு தொடர்பில் அவர்களிடமிருந்து ஆரம்பத்தில் ஆலோசனை–களைப் பெறுகின்றனர். அவர்களை வலுவூட்டுவதனூடாக, நோயாளர்களுக்கு எதிர்காலத்தில் பாரதூரமான சுகாதார பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கச் செய்யாமல் தவிர்த்துக் கொள்ள உதவியாக அமைந்திருக்கும்.” என்றார்.

# 4A’s விளம்பரப்படுத்தல் விருதுகள்




சமீபத்தில் நடைபெற்ற nj 4A’s நிறுவனத்தின் விளம்பரப்படுத்தல் விருதுகள் நிகழ்வில் AIA இன்சூரன்ஸ் தனது ஆக்கபூர்வமான மற்றும் கவர்ச்சிகரமான பிரச்சாரத் திட்டங்களுக்காக குறிப்பிடத்தக்க ஐந்து விருதுகளை வெற்றி பெற்றுப் பிரகாசித்திருந்தது.

AIA இன் ‘சுவ வலங்’ இதன் போது இரண்டு தங்க விருதுகள் உட்பட மூன்று விருதுகளை வெற்றி பெற்று ஒரு சிறந்த பிரச்சாரத் திட்டமாகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. AIA ஸ்ரீலங்கா இலங்கைப் புற்றுநோய்ச் சங்கம் மற்றும் ஆக்கபூர்வமான விளம்பர நிறுவனமான லூப்ஸ் இன்டகிரேட் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்டிருந்த இப்பிரச்சாரத் திட்டமானது மார்பகப் புற்று நோய் பற்றிய விழிப்புணர்வு, அது தொடர்பாக கல்வி வழங்கல் மற்றும் சுய பரிசோதனையின் முக்கியத்துவம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான மக்களின் உள்ளார்ந்த அறிவாற்றலைத் தட்டியெழுப்பிய ஒரு தனித்துவமான பிரச்சாரத் திட்டமாகவே அமைந்திருந்தது. இப்பிரச்சாரத் திட்டமானது இலங்கைப் பெண்கள் கலிமண் பானையில் (வலங்) ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு தங்களது உடலில் ஏற்படும் அசாதாரணமான மாற்றங்களை அடையாளம் காணக்கூடியவாறு கலாசார நடவடிக்கையினைப் பயன்படுத்துவதன் மூலமாக இது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கல்வியினை வழங்குவதற்கு உடலியல் மற்றும் டிஜிட்டல் ரீதியான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்திருந்ததுடன், கலாசார ரீதியில் உணர்திறன் மிக்க முறையில் சுய பரிசோதனையின் முக்கியத்துவத்தினையும் மிகவும் வினைத்திறனாக வெளிப்படுத்தியுமிருந்தது.



# கெஸ்பேவ நகரில் புதிய ATM

இலங்கையின் SOS சிறுவர் கிராமங்கள், ஹற்றன் நஷனல் வங்கியுடன் (HNB) இணைந்து, பிலியந்தலை SOS சிறுவர் கிராம வளாகத்தினுள் HNB இன் 817 ஆவது ATM ஐ நிறுவியுள்ளது.

இந்த நிகழ்வில், இலங்கையின் SOS சிறுவர் கிராமங்களின் தேசியப் பணிப்பாளர் திவாகர ரட்னதுரை, பிரதித் தேசிய பணிப்பாளர் கீர்த்தி ஹெட்டியாரச்சி, பிரதித் தேசிய பணிப்பாளர் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பணிப்பாளர் தனஞ்சய பெரேரா, பணிப்பாளர், நிதி விருத்தி மற்றும் தொடர்பாடல்கள் தலைமை அதிகாரி கயந்த தல்படாடோ, HNB இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி சஞ்ஜய் விஜேமான்ன, டிஜிட்டல் வியாபாரங்கள் உதவி பொது முகாமையாளர் சம்மிக வீரசிங்க, வைப்புகளுக்கான தலைமை அதிகாரி விரங்க கமகே மற்றும் இரு நிறுவனங்களின் இதர முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். வங்கியியல் வசதியை மேம்படுத்துவதிலும், உள்ளூர் சமூகத்தாரின் பணத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வசதியை உறுதி செய்வதிலும் இந்த நடவடிக்கை பங்களிப்பு வழங்கும்.

# அதானி காற்றாலை மின் திட்டங்களை தொடர சாதகமான சமிக்ஞை

அதானி காற்றாலை திட்ட வழக்கை விசாரிக்க பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் முழுமையான ஐவரடங்கிய குழு முன்னிலையில், இலங்கையின் பொருளாதாரம் மற்றும் வலுசக்தியின் நிலைபேறான தன்மைக்கு இந்த தேசிய திட்டம் முக்கியத்துவமானது என்பது எடுத்துக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர்கள் முன்வைத்த முன்கூட்டிய விசாரணை மற்றும் விசாரிப்பதற்கு ஆதரவான நாட்களை நீடிப்பதற்கான கோரிக்கையை மன்று நிராகரித்ததோடு, வழக்கை ஒக்டோபரில் எடுத்துக் கொள்ள நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை (02) உத்தரவு வழங்கியுள்ளது. அத்துடன் மிக முக்கியமாக "இடைக்கால உத்தரவு வழங்க முடியாது எனவும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் 20 வருடங்களுக்கு அதானி யிடம் இருந்து ஒரு முறு அலகிற்கு 8.26 சத டொலர்கள் எனும் விலையில் காற்றாலை மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான, மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் (PPA) நுழைவதற்கான விலைமனு கோரலை அதானி குழுமத்திற்கு வழங்க, கடந்த 2024 மே 06ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுத்த முடிவை எதிர்த்து, வனவிலங்கு இயற்கை பாதுகாப்பு சங்கம் (WNPS), கலாநிதி ரொஹான் பெத்தியகொட உள்ளிட்ட சில விஞ்ஞானிகள் தாக்கல் செய்த ஆட்சேபனை மனு கடந்த வெள்ளிக்கிழமை பரிசீலனை க்குட்படுத்தப்பட்ட போதே உயர் நீதிமன்றம் மனுதாரர்கள் கோரிய இடைக்கால எந்தவொரு தடையுத்தரவையும் வழங்கவில்லை.

அதானி திட்ட விபரங்கள் மற்றும் இலங்கைக்கான நன்மைகள்

அதானியின் காற்றாலைத் திட்டமானது, இலங்கையில் 1 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மிகப்பாரிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி முதலீடாகும்.

இந்த முதலீட்டில் 484 ஆறு திறன் கொண்ட நாட்டின் மிகப்பெரிய காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதும் உள்ளடங்குகின்றது.

# செயற்கை நுண்ணறிவில் இள விஞ்ஞானமானிப் பட்டம் அறிமுகம்



இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) புத்தம் புதிய சிறப்புப் பட்டக்கல்வியான செயற்கை நுண்ணறிவில் இளவிஞ்ஞானமானிப் பட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் பட்டக் கல்வியானது இலங்கையின் உயர் கல்வித் துறையில், குறிப்பாக அரசசார்பற்ற பல்கலைக்கழகம் என்ற ரீதியில் SLIIT நிறுவனத்துக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக அமைந்துள்ளது.

கல்வி மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கத்தின் எதிர்காலமாக செயற்கை நுண்ணறிவு அடையாளம் காணப்பட்டிருப்பதால், அதிரடியான தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில் குறித்த துறையில் நிபுணர்களுக்கு அதிகரித்துள்ள கேள்வியைக் கருத்தில் கொண்டு நான்கு வருட செயற்கை நுண்ணறிவில் இளவிஞ்ஞான மானி (சிறப்பு) பட்டக் கல்வியை SLIIT வடிவமைத்துள்ளது.

சிறந்த நடைமுறை அனுபவத்துடன் பரந்துபட்ட தத்துவார்த்த அறிவை வழங்கக் கூடியதாக அமைந்துள்ள இந்தப் பட்டக் கல்வியின் இறுதி ஆண்டில் ஆய்வுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். தகவல் ஆய்வு, நரம்பியல் வலையமைப்புகள் மற்றும் அறிவார்ந்த அமைப்புகள் போன்ற அதிநவீன பகுதிகளை வலியுறுத்துவது போன்ற விரிவான பாடத்திட்டத்தினால் இப்பட்டம் தனித்து நிற்பதுடன், இதன் மூலம் சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பற்றி மாணவர்கள் நன்கு அறிந்திருப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

# பீப்பள்ஸ் லீசிங் புதுக்குடியிருப்பில்



இலங்கையில் வங்கி அல்லாத நிதிச்சேவைகளை வழங்குவதில் முன்னிலை வகித்து வருகின்ற பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, 2024 ஜூலை 12 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பில் தனது புதிய கிளையொன்றைத் திறந்து வைத்துள்ளது.

இல.10, முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு என்ற முகவரியில் அதிநவீன வசதிகளுடன் அமைந்துள்ள இக்கிளையானது பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி வழங்கும் ஒட்டுமொத்த தீர்வுகள் மற்றும் சேவை களையும் வழங்குகின்றது.

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தனது சமூகங்கள் மீது கொண்டுள்ள அர்ப்பணிப்பின் அடையாளமாக, இந்த முக்கியமான தருணத்தைக் குறிக்கும் வகையில், முல்லைத்தீவு / முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர் பாடசாலையில் ஆதரவை எதிர்பார்த்துள்ள 50 சிறுவர்க ளுக்கு காலணி வவுச்சர்களை இது வழங்கியுள்ளது.

இப்புதிய கிளையானது பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பிரசன்னம் வட மாகாணத்தில் தொடர்ந்தும் விரிவடைந்து கொண்டிருக்கும் நிலையில், கொடிகாமம், கிளிநொச்சி, சுன்னாகம், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், நெல்லியடி மற்றும் தற்போது புதுக்குடியிருப்பு என 8 கிளைகளை கொண்டுள்ளது.